REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.
மலர் 5] சென்னை: புரட்டாசி 21உ திங்கள் (7—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 22உ செவ்வாய் (8—10—57) [இதழ் 98

மிக உயரமான நெடுஞ்சாலை

ஹாங்காங், அக். 7—

மத்திய ஆசியாவில் உள்ள சிங்கியாங்குடன் திபெத்தை இணைக்கும் 740 மைல் நீளமுள்ள நெடுஞ்சாலை அமைப்பு முடிந்துவிட்டது என்றும், கடல் மட்டத்திற்கு 12,000 அடி உயரத்தில் போடப்பட்டுள்ள இந்த சாலையே உலகத்தில் மிகவும் உயரமானதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதுவரையில் ஒட்டகங்கள் மூலம் இத்தொடர்புகொள்ள ஒரு மாத காலம் பிடித்துள்ளது என்றும், இனி 'டிரக்கு'கள் மூலம் 5 நாட்களில் செல்ல முடியும் என்றும் புதிய சீன செய்தி நிலையம் அறிவித்துள்ளது.

'வானொலி மூலமும் இந்தித் திணிப்பா?'

'விபரீதமான விளைவுகள் தோன்றும்'

'ஏழு மணி நேர நிகழ்ச்சியில் தமிழுக்கு ஒரு நிமிடம் மட்டுமே!'

'இந்த அநீதிக்கு விளக்கம் வேறு வேண்டுமா?'

டில்லி சர்க்காருக்கு பொதுச்செயலாளர் எச்சரிக்கை

அகில இந்திய வானொலி அதிகாரியிடம் தி. மு. கழகச் சார்பில் முறையீடு

அகில இந்திய வானொலியின் டைரக்டர்-ஜெனரலான ஜே. சி. மத்தூர் என்பாரை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தோழர் வி. பி. இராமன் அவர்களுடன் கடந்த 5—10—'57 அன்று, சென்னை வானொலி நிலையம் சென்று சந்தித்தார். அந்த அதிகாரியிடம் தி. மு. கழகச் சார்பில் அறிக்கை ஒன்று தரப்பட்டது.

'விவித் பாரதி' நிகழ்ச்சியானது, இந்தித் திணிப்பிற்கு மற்றொரு எடுத்துக்காட்டு என்றே தென்னாட்டவரால் கருதப்படுகிறது என்பதை அந்த அதிகாரிக்கு பொதுச்செயலாளர் எடுத்துரைத்தார்.

இந்த விஷயத்தில் முடிந்ததைச் செய்வதாக அந்த அதிகாரி வாக்களித்தார். மேலும் அவர், புதிய 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவியை மலாயாவாழ் தமிழர்களுக்குப் பயன் தரும் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் பயன்படுத்துவதிலும் டெல்லி சர்க்கார் அக்கறை கொண்டிருப்பதாகவும், சென்னையிலிருந்து அத்தகைய நிகழ்ச்சிகள் சீக்கிரமே ஒலிபரப்ப எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

அகில இந்திய வானொலிக்குத் தரப்பட்ட அறிக்கையின் முழு விவரம் பின்வருமாறு :—

தென்னாட்டின் நான்கு வட்டார மொழிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது தமிழ் மொழியிலோ நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு சக்திவாய்ந்த ஒலிபரப்புக் கருவிகள் இல்லாமையால், தென்னாட்டு மக்கள்—குறிப்பாகத் தமிழக மக்களும் தூரக்கிழக்கு நாடுகளிலும் தென் ஆப்பிரிக்கா, இலங்கை முதலிய நாடுகளிலும் வாழும் இலட்சக்கணக்கான தமிழர்களும் பெரும் கஷ்டத்திற்காளாகியுள்ளனர். இப்போது சென்னையிலிருக்கும் நடுத்தர அலை ஒலிபரப்புக் கருவி 20கிலோவாட் சக்திகொண்டது தான்; இது வெளிநாடுகளிலும் தென்னாட்டின் தொலைதூரத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லை. எனவே, சென்னையில் ஒரு 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி அமைக்கப்படவிருக்கிறது என்ற செய்தி கேட்டபோது பொதுவாக அனைவரும் மகிழ்ந்தனர்; ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

சென்னையில் உள்ள இந்த சக்திவாய்ந்த ஒலிபரப்புக் கருவி, பம்பாயில் இதேபோல் உள்ள ஒரு 'யூனிட்'டுடன் சேர்ந்து 'விவித் பாரதி' என்ற பெயருடைய நிகழ்ச்சிகளைக் கூட்டாக ஒலிபரப்பும் என்று புதுடில்லியில் முடிவு செய்யப்பட்டவுடனேயே தென்னாட்டு மக்கள் கோபப்பட்டனர்; அவர்கள் உள்ளத்தை அச்சமும் ஆத்திரமும் ஆட்கொண்டன. இதன் காரணம் சுலபத்தில் அறியக் கூடியதே.

நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டாய இந்தி திணிக்கப்படுவதற்குப்பொதுவாகத் தென்னாட்டில் பரவலான எதிர்ப்பு இருக்கிறது என்பது, பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்க மறுப்பவர்களுக்கும்கூட இப்போது தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

'விவித் பாரதி' தலைப்பின் கீழ் ஒலிபரப்ப அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்திருக்கிறது; விரும்பாத மக்கள்மீது தேவைப்படாத ஒன்றைத் திணிப்பதற்கு டெல்லி சர்க்கார் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ளுவர் என்ற தென்னாட்டவரின் சந்தேகங்களை, இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

1957 *அக்டோபர் 3-ந்தேதியன்று 'விவித் பாரதி' நிகழ்ச்சி மொத்தம் 7 மணி 15 நிமிடங்களுக்கு இருந்தது; இதில் 9-15 முதல் 9-30 வரை (பாரத் வாணி) 15 நிமிடங்கள் மட்டுமே—மேலும் 8-15 முதல் 8-35 வரையிருந்த (மஞ்ஜூஷா) 20 நிமிட நேரத்தில் ஒரு பகுதியும் மட்டுமே—பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டது. இதர நாள் நிகழ்ச்சிகளிலும் அதிக மாற்றம் ஒன்றும் இல்லை. மொத்தம் 5 மணி நேர நிகழ்ச்சிகளில் சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே ஏதோ பிச்சையிடுவதுபோல, பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன; எஞ்சியுள்ள நேரம் முழுவதிலும் இந்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டு விடுகின்றது. தென்னாட்டு மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் தலையும் தெரிவதில்லை; காலும் தெரிவதில்லை. இது தங்களுக்குப்புரியாதமொழியில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி, மக்கள்மீது வலுக்கட்டாயமாக அவற்றைத் திணிப்பதற்கு ஒப்பாகும்.*

பிரதேசமொழிகளில் ஒலிபரப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ள 15 நிமிட நேரத்தைக்கூட 14 மொழிகள் பங்கு போட்டுக் கொள்ள வேண்டியுள்ளது; அதாவது, ஒவ்வொரு 15நாளுக்கும் 15 நிமிட நேரம் அல்லது ஒரு நாளில் 5 மணி நேர ஒலிபரப்பில் சராசரியாக ஒரு நிமிடம் மட்டுமே தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பிற்குக் கிடைக்கும்! இந்த அநீதிகுறித்து விளக்கத் தேவை இல்லை; இது அனைவருக்கும் தெரிந்தே இருக்கவேண்டும்.

இந்தித் திணிக்கப்படுவதை உறுதியாக எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டின் பிரதான அரசியல் கட்சிகளுள் ஒன்றாகும். அறிவிக்கப்பட்டுள்ள வகையிலேயே 'விவித் பாரதி' நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலிபரப்பப்படுமானால், அது தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளை குறிப்பிடத்தகுந்த அளவு கிளப்பிவிடும் என்பதை அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வரவேண்டியது தனது கடமை எனக் கழகம் கருதுகிறது.

பிரதேச மொழிகளை நிந்திக்கிற வகையில்—புறக்கணிக்கிற வகையில் திட்டமிட்டு இந்தி நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலிபரப்பப்படுவது, சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறபடி இந்தியைப் பரப்புவதற்கு உதவாது; இந்தி பேசாத மக்களின் நியாயமான உணர்ச்சிகளை, கொஞ்சமும் முன்யோசனையின்றி மிதித்துத் துவைப்பதானது நிலைமையை மேலும் பாதகமாக்கும்; அந்த மொழியை (இந்தி) பரப்புவதற்கு உதவாது என்பதுடன் இந்தி பேசுகிற மக்களுக்கும்—பேசாத மக்களுக்கும் இடையில், நீக்கமுடியாத நிரந்தரமான பிளவைத்தான் உண்டுபண்ணும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் என்ற முறையில் நான், கீழ்க்காணும் உருவான யோசனைகளை தகவல், மற்றும் ஒலிபரப்பு அமைச்சரவைமுன் வைக்க விரும்புகிறேன் :—

(1) சென்னையில் உள்ள 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி தென்னாட்டின்—தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் பயன்படுத்தப்பட வேண்டும்; இதனால் ஒவ்வொரு மொழிக்கும் தினந்தோறும் ஒன்றரை மணி நேரம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும், இந்த நிகழ்ச்சிகளை சிற்றலைகளிலும் ஒலிபரப்ப வேண்டும். மேலும், இந்த 4 மொழிகளிலும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் சாரங்களை, சென்னை, விஜயவாடா, கோழிக்கோடு, பெங்களூர் ஆகியவற்றில் உள்ள நடுத்தர அலை ஒலிபரப்புகள் மூலமும், பிரதேசத்தில் உள்ளவர்களும் பயன்பெறும்வண்ணம் ஒலிபரப்ப வேண்டும்.

(2) தென்னாட்டு மொழிகளில் சென்னையிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் தூரக்கிழக்கு நாடுகளிலும், இலங்கையிலும் வாழும் தமிழர்களுக்கும்பயன்படும் வகையில் தக்க நேரத்தில் ஒலிபரப்பப்படவேண்டும்.

(3) எது எப்படி இருந்தாலும், இப்போதைய ஏற்பாட்டின்படி தென்னாட்டின் நான்கு பிரதேச மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவானது என்பதால், 'விவித பாரதி' நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதை உடனே நிறுத்த வேண்டும்; இன்றேல், விபரீதமான விளைவுகள் தோன்றக் கூடும்.

'பதுங்கிப் பாய்வதற்குப் 'புதர்'களைத் தேடி அலைகிறார்கள்'

'இந்தித் திணிப்பில் வடவர் வெற்றி பெற்றால் ஏகாதிபத்தியம் நிலைத்துவிடும்'

'இன்று இந்தியை எதிர்ப்பதற்கு நமக்கு வீரத் துணைவர்கள் கிடைத்திருக்கின்றனர்'

திருவண்ணாமலை மாநாட்டில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

கடந்த 22-9-57-ல், திருவண்ணாமலையில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது ;—

"அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே தமது போர்க்குரலை உயர்த்தியிருக்கிறார்; அண்ணா அவர்கள் போர்க்குரலை உயர்த்தியிருக்கிறார் என்பது என் அத்துணை சிறப்புடையது என்று சொன்னால், இங்கேயிருக்கிற நாங்கள், நாள்தோறும் போர்க்குரலை உயர்த்திக்கொண்டிருக்கிறவர்கள்; அண்ணா அவர்கள், தருணம் பார்த்துத்தான் போர்க்குரலை உயர்த்துவார்கள்; உயர்த்தினால், அடுத்த குரல் வெற்றிக் குரலாகத்தான் இருக்கும் என்பது நம்முடைய சிறிய அரசியல் அனுபவமாகும்.

"அண்ணா அவர்கள், எப்பொழுதுமே அந்தப் போரை—போர்க்குரல் எழுப்புகின்ற அந்த வலிமையான ஆயுதத்தை அடிக்கடி மக்கள் முன்னிலையிலே காட்டுவதில்லை; மிகப் பொருத்தமான நேரத்தில்—நாம் அத்தனைபேரும் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில்—நமக்கெல்லாம் ஆறுதல் சொல்லக் கூடிய வகையிலே, 'நாம் இந்தப் பிரச்சினையை விட்டுவிடப் போவதில்லை' என்று நமக்கும் சொன்னார்; எதிரிகளுக்கும் மிகக் கடுமையான முறையிலே-அவர்களுக்கே புரியக்கூடியவகையிலே எடுத்துச் சொன்னார். 'இந்தப் பிரச்சினையிலே நாங்கள் விட்டுவிடமாட்டோம்; நல்ல உதை கிடைக்கும்; 1937-லே கிடைத்ததைவிட அதிக வலிமையான தடிகொண்டிருக்கிறேன் — அப்போதைவிட பலமான அடி கிடைக்கும் பார்'

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்-நீங்கள்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—10—57 திங்கள்

ஆதாரக் கல்வி

ஆதாரக் கல்வியின் அடிப்படை நோக்கம் குறித்து, பலர் பலவிதமான கருத்துக் கொண்டுள்ளனர்; அக்கருத்துக்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளன என்ற உண்மையை, இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சராகஇருந்து வரும் அபுல் கலாம் ஆசாத் அவர்களே சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் இருந்துவிடாது, ஆதாரக்கல்வியின் அடிப்படை என, அவர் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். அதுபற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

ஒரு குழந்தை எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதுடன், அதே காலத்தில் அச்சிறுவயதிலேயே வாழ்க்கைக்குத் தேவையான ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளும் ஏற்பாடே ஆதாரக் கல்வியாகும் எனக் கூறுவது தவறு; பயிலப்படும் கைத்தொழிலேதான் ஒரு குழந்தையின் வாழ்க்கைக் கல்வியாகும்; இதுதான் ஆதாரக் கல்வியின் உண்மைப் பொருள் —என்று, அபுல் கலாம் ஆசாத் விளக்கமளித்துள்ளார்.

இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் ஆதாரக் கல்விக்குத் தந்துள்ள விளக்கத்தை சிற்றூர் மக்களிடம் தெளிவுபட எடுத்துக் கூறினால், உண்மையிலேயே எந்தத் தாயும் தன் குழந்தைகளை ஆதாரப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முன்வரமாட்டாள். அதேபோன்று எந்தத் தகப்பனும், அந்த ஆதாரப்பள்ளி இருக்கும் பக்கம் தனது பிள்ளைகள் விளையாடச் செல்வதைக்கூட அனுமதிக்க முன்வரான்.

ஆதாரக் கல்வி என்றாலே கொடுநஞ்சைவெறுப்பதுபோல் கிராமத்து மக்கள் வெறுக்கத் துணிந்துவிடுவர். ஆதாரக் கல்வி ஆசிரியர்கள் கிராமத்திற்குள் அடியெடுத்து வைப்பதைகூட கிராமத்தவர்கள் விரும்பமாட்டார்கள்.

ஆதாரக் கல்வி என்ற பெயரும், அக்கல்வியைக் கற்பிப்பதற்கான பள்ளி என்ற ஓர் அமைப்பும் எப்பொழுதும், கிராமங்களில் இருந்ததில்லை. அவை இல்லாத நிலையில்தான், தகப்பன் செய்துவந்த தச்சு வேலையை ஓடிவிளையாடும் பிள்ளைப் பருவம் முதற்கொண்டே அவன் மக்கள் பயின்று வந்திருக்கின்றனர். அதே முறையைப் பின்பற்றி அவன் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அதே தச்சுத் தொழிலைப் பயின்று, சாகும்வரையில் அத்தொழிலிலேயே ஈடுபட்டு வந்திருக்கின்றனர். மற்றக் கிராமத் தொழில்களுக்கும் மேற்குறிப்பிட்ட விளக்கமே பொருந்தும்.

தகப்பன் தொழிலை அவன் மக்கள் பயின்றுகொண்டு, அதே தொழிலைத் தகப்பனைப் போன்று தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக்கொள்ள கிராமப் பகுதிகளில் இன்றைய நிலையில் ஒருவரும் தயாராக இல்லை. அம்மனமாற்றத்துக்கு என்ன காரணம்?

அவ்வுண்மையான காரணத்தைக் கண்டறிந்து கொண்டால்தான், தச்சன்மகனை தச்சனாகப் பயிற்றுவிப்பதையேமூலநோக்கமாகக்கொண்டுள்ள ஆதாரக் கல்விக்கு மீண்டும் உயிரூட்ட முடியுமாமுடியாதா என்பதைமுடிவுகட்ட இயலும். அவ்வுண்மையைக் கண்டறியாமல், அவ்வுண்மை தெரிந்திருந்தாலும் அதை மறைத்துக்கொண்டு, விரைந்து மாறிவரும் கால வேகத்தில் மீண்டும் கிராம மக்களை தச்சன்மகன் தச்சனாகவும், கொல்லன் மகன் கொல்லனாகவும், உழவன் மகன் உழவனாகவும் வாழ்ந்துவர மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி கண்டுவிடமுடியும் என நம்புவதும், அதற்கு ஏற்ற ஆற்றல்மிகு ஆயுதம் ஆதாரக் கல்விதான் என நம்புவதும் இறுதியாக ஏமாற்றத்திலேயே முடிவுறும்.

தச்சுத் தொழிலைக் குடும்பத் தொழிலாகக்கொண்டிருந்த ஒரு குடும்பத் தலைவன், அத்தொழிலைத் தம் மக்கள் அனைவரும் கற்றுக்கொள்ள விரும்பாததற்கு என்ன காரணம்? அம்மக்களில் இரண்டொருவராவது தாம் பிறந்த கிராமங்களைவிட்டு வெளியேறி, நகரங்களுக்குச் சென்று வேறு தொழிலைக் கற்றுக்கொண்டு காலங்கழிக்கட்டும் என்று, ஏன் அந்த கிராமத்துத் தச்சன் எண்ணலானான்?

குடும்பத் தொழிலையே நம்பி தங்கள் வாழ்க்கையை நடத்தி வருவதற்கு கிராமங்களில் வழியே இல்லாமல் போயிற்று. அத்தொழிலாளர் அனைவருக்கும் தாம் கற்ற கைத்தொழில் வயிறு நிறைய சோறு அளிப்பதாகக் காணோம். வறுமையும் வாட்டமும் தருவதாக அத்தொழில் மாறிவிட்டது. வாழ்வில் சுவையைத் தரவேண்டிய தொழில், கசப்பைத் தர முன்வந்துவிட்டது. வாழ்க்கை பெருஞ் சுமையாயிற்று. எனவே, இளமை முதல் அடி உதைபட்டு, அரும்பாடுபட்டு கற்றுத் தேறிய கைத்தொழில், கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகைசெய்ய இயலாது ஆற்றலற்றுப் போகவே, நற்ற கைத்தொழிலே தனது சுகத்துக்குக் கூற்றாக மாறிவிட்டதைக் கண்ட பிறகும், அதை வாழ்நாள் முழுதும் கட்டி அழ எந்தத் தொழிலாளிதான் முன்வருவான்? தனக்கு வாழ்வளிக்கத் தவறிவிட்ட அதே தொழிலை தனது மக்களும் கற்று, வாழ்நாள் முழுதும் வாடிவதங்கி, சாகும் நாள் வந்ததும் செத்து மடியட்டும் என்று எந்த இருதயம் உள்ள தகப்பன்தான் விரும்புவான்?

கிராமங்கள் அனைத்தும் விவசாயத்தை நம்பி வாழ்வனவாகும். விவசாயத்தை மையத் தொழிலாகக் கொண்டுதான் மற்றக் கிராமத் தொழில்கள் வாழ்ந்தாக வேண்டும். விவசாயம் நிலையான தொழில் அல்ல. நிலவளம், நீர்வளம், பருவநிலை, தட்ப வெப்ப மாறுதல் இவ்வளவுக்கும் ஈடுகொடுத்து, விவசாயம் வளரவேண்டும்.

விவசாய வளத்துக்கு இவ்வளவு வசதிகளும் அமைந்திருந்தாலும், விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் எந்த நாடும் தனது பெருகிவரும் மக்களின் தேவையைப் பூர்த்திச் செய்துகொள்ள முடியாது. தொழில்வளம் கூடவேண்டும்—இயந்திரத் தொழில்வளம் பலகிப் பெருகவேண்டும்.

அந்த நல்விளைவை ஆதாரக் கல்வி நல்காது. அதற்கு, அத்தகைய ஆற்றல் இல்லை.

இதை ஆளவந்தார்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். கல்வித் துறையை மந்திக் கைமாலையாக ஆக்க ஆளவந்தார்கள் முன்வரககூடாது.

ஆதாரக் கல்விபற்றி இந்தியப் பேரரசு நியமித்த கல்வி நிபுணர் ஒருவர் கருத்தறிவித்துள்ளார். அவர் கருத்தை ஆளவந்தார்கள் ஏற்று, ஆதாரக் கல்வி பற்றி தாம் கொண்டுள்ள கருத்தை மீண்டும் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும்.

'தமிழகத்தில் பண்டைக்காலந்தொட்டு கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறை நிலவியது'

'பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமளிப்பதின் மூலமே பொறுப்புணர்ச்சியை வளர்க்க முடியும்'

முசிரி பஞ்சாயத்து மாநாட்டில் க. அன்பழகன்

திருச்சி, அக். 5—

"பண்டைக் காலந்தொட்டே நம் நாட்டில் கிராமப் பஞ்சாயத்து ஆட்சிமுறை இருந்துவந்திருக்கின்றது. பஞ்சாயத்துத் தலைவர்கள் 'குடவோலை' என்ற இரகசிய வாக்குப் பதிவு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்"

என்று தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் முசிரி தாலுகா பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மாநாடு, திரு. டி. புருஷோத்தமன் எம்.எல்.சி. தலைமையில் முசிரியில் 29—9—57-ல் நடைபெற்றது. திரு. பி. இராமநாதன் அனைவரையும் வரவேற்றார். திரு. கே. கோவிந்தராசலு மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

திரு. அன்பழகன் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிராம இராஜ்யம் என்ற அடிப்படையில்தான் நம் நாட்டின் ஆட்சி முறை அமைய வேண்டும் என்று சாந்தியடிகள் விரும்பினார். எனவே, கிராம இராஜ்யம் ஏற்படும் வகையில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் வழங்க வேண்டியது அவசியமாகும்.

"உண்மையிலேயே பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் இருந்திருக்குமேயானால் வடஎல்லைப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்து போயிருக்கும். இப்பிரச்சினையில் பஞ்சாயத்துக்கள் மூலம் வாக்குக் கணிப்பு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

"பஞ்சாயத்து யூனியன் அமைப்பதன் மூலம் வட்டாரம் அதிகமாவதால், குறைகளும் அதிகமாகின்றன. எனவே, குறைகள் தீர்க்கப்படாமற்போகக் கூடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. கிராமத்தின் குறைபாடுகள் கிராம மக்களால் தீர்க்கப்படுமளவுக்கு அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும்.

"நிலவரி வசூலிக்கும் பொறுப்பை பஞ்சாயத்துக்களே ஏற்கவேண்டும் என்ற யோசனையை ஏற்பதன் மூலம் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத்தான் தொந்தரவு ஏற்படும் எனக் கருதுகிறேன். மக்களுக்குப் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவது பஞ்சாயத்து போர்டுதான் என்பதால் அதற்கு அதிகாரங்களையளித்து பொறுப்பினை வளர்க்கவேண்டும்.

"பஞ்சாயத்து யூனியனில் வட்டார சட்டசபை உறுப்பினரும், பார்லிமெண்ட் உறுப்பினரும் அங்கம் வகிக்கவேண்டும்.

"சேர சோழ பாண்டியர் காலத்திலும் கிராம பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஆட்சி மாறினாலும், பஞ்சாயத்துக்கள் மாறாமல் இருந்தனவாதலால் குறைகளின்றி மக்கள் வாழ்ந்தனர். ஆட்சிக்கேற்ப இப்பொழுது அதிகாரங்கள் மாறுவதால் தொல்லைகள் மிகுதியாகின்றன."

பம்பாயில் புதிதாக 15 சர்க்கரை ஆலைகள்!

டெல்லி சர்க்கார் அனுமதி வழங்கிவிட்டதாம்

பூனா, அக். 4—

"அடுத்த இரண்டாண்டுக்குள் பம்பாய் மாநிலத்தில், 15 சர்க்கரை ஆலைகளை நிறுவிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது"

என்று, இந்தியப் பேரரசின் அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

இவற்றில் 12 தொழிற்சாலைகளுக்கான 'பெர்மிட்' வழங்கப்பட்டுவிட்டது என்றும், மூன்று தொழிற்சாலைகளுக்கான 'பெர்மிட்' அன்னியச் செலாவணிக் கஷ்டத்தைப் பொறுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் சீக்கிரமே தரப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உள்நாட்டுக் கால்வாய்ப் போக்கு - வரத்துத் திட்டமும் தோல்வியா?

புதுடில்லி, அக். 5—

"இந்தத் திட்டங்கள் யாவும் பேராசைத் திட்டங்கள் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால், நவீன தொழில் நுணுக்க அறிவும், தேவைப்படும் பெரிய தொகையும் தரப்பட்டால் நிறைவேற்றப்படக்கூடியனவாக இந்தத் திட்டங்கள் காணப்படுகின்றன"

—என்று, அகில இந்திய வானொலியில், உள்நாட்டுப் போக்குவரத்து கால்வாய் நெறியாளர் திரு. வாசுதேவ் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சர் இலாகா, குழு ஒன்றை அமைத்து உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து வளர்ச்சிக்காகத் தரப்பட்ட அறிக்கையை ஆராய ஏற்பாடு செய்திருந்தது; அந்தக் குழு சில திட்டங்களைச் சிபாரிசு செய்திருந்தது.

நர்மதா ஆற்றைக் கங்கையுடன் இணைத்து, கோதாவரி—வெங்கா ஆறுகளுடன் தொடர்பு ஏற்படுத்தவேண்டும் என்றும் இதேபோன்று தபதி நதியையும் கோதாவரியுடன் இணைக்கவேண்டும் என்றும், கங்கையை மகாநதியுடன் இணைக்கவேண்டும் என்றும் பல திட்டங்கள் தீட்டப்பட்டன.

இதன் மூலம் உள்நாட்டுப் போக்குவரத்துக்குத் தண்ணீர் மூலம் வசதி கிடைக்கும் என்றும் அறிவித்தனர்.

துறைமுகத் தொடர்புக்கும், சாமான்களின் துரிதப் போக்குவரத்துக்கும் இந்தத் திட்டங்கள் பயன் தரும் என்றும் கூறினர்.

ஆனால், இப்படியெல்லாம் பெருமையுடன் பேசப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற இந்தியப் பேரரசுக்கு வழியில்லை என்பதைத்தான், மறைமுக நிலையில், வானொலியில் கால்வாய் நெறியாளர் தெரிவித்துள்ளார் என்றே கருதவேண்டியுள்ளது.

எதிர்ப்பை அலட்சியம் செய்யும் போக்கு!

'அணு ஆயுதச்சோதனைகளால் ஏற்படும் கதிரியக்கத்தின் காரணமாக ஜப்பான் மக்கள் அவதியுறுகின்றனர்' என்ற உண்மையை வலியுறுத்தி, 'அமெரிக்கா

(4-ம் பக்கம் பார்க்க)

'தென்னாடு முழுவதும் ஒரே அமைப்பாகும்'

கவர்னர் வி. வி. கிரியும் கூறுகிறார்

சென்னை, அக். 5—

"நான் சென்னையைச் சேர்ந்தவன்; நான் சென்னையின் நலனுக்காகப் பாடுபடுவேன்; சென்னைக்காக உயிரையும் விடுவேன்; நான் இன்று அடைந்துள்ள நிலைக்குக் காரணம் நான் இங்கு பெற்ற உணர்வு, கல்வி, ஊக்கமேயாகும்"

என்று, உத்தரப் பிரதேச மாநிலக் கவர்னர் வி. வி. கிரி சென்னை இலட்சுமிபுரம் இளைஞர் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், தென்னாடு முழுதும் ஒரு தனி அமைப்பாக விரைவில் ஆக்கப்படலாம் என்று தானும் நம்பிக்கை தெரிவித்து, மக்களிடையே உள்ள தவறான போக்கும், வகுப்புவாத ஈடுபாடுகளும் விட்டொழிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

திராவிடமெங்கும் விடுதலை வார விழா

ஊர்தோறும் கழக இலட்சிய விளக்கம்

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், நாடக-இசை அரங்குகள் நடைபெற்றன

போதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க நாடெங்குமுள்ள தி. மு. கழகக் கிளைகளும், கழகச் சார்புடைய ஏனைய மன்றங்களும், அமைப்புகளும், 'திராவிட நாடு விடுதலை வார'த்தை மிகச் சிறப்புறக் கொண்டாடி யிருக்கின்றன.

விடுதலை வார விழாவினையொட்டி, பொதுக்கூட்டங்கள், கொடியேற்று விழாக்கள், விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள், இசை—நாடக அரங்குகள் ஏழைகளுக்கு உணவளித்தல், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

பொதுக்கூட்டங்களில் தோழர்கள், திராவிட நாடு விடுதலை பெறவேண்டிய இன்றியமையாமையை விளக்கியும், தென்னகத்துக்கு டில்லி ஏகாதிபத்தியம் இழைத்துவரும் அநீதிகளை எடுத்துக் காட்டியும் சொற்பொழிவாற்றினர்; நிகழ்ச்சிகளை இங்கு சுருக்கமாகத் தருகிறோம் :—

சென்னையில் :

2-வது வட்டம் :

28—9—57 மாலை 6-30 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது; தோழர்கள் அன்பரசு, அன்புரோசு, மதிவாணன் ஆகியோர் பேசினர்; இறுதியில் இனிப்பு வழங்கப்பட்டது.

4-வது வட்டம்

வண்ணையம்பதி அண்ணா படிப்பகச் சார்பில் 22, 23—9—57 நாட்களில் காலை 10 மணியளவில், எண். 88, 84 சோலையப்பன் தெரு பணி மனைகளில் விழாவையொட்டி தோழர் பி. பிசசையா தலைமையில் கழகக் கொடி ஏற்றப்பட்டு சிறுவர்களுக்கு இனிப்பும் தேநீரும் வழங்கப்பட்டது.

5-வது வட்டம்

17—9—57 காலை 8 மணியளவில் தி. மு. கழக இல்லத்தில் கொடியேற்றப்பட்டு விழா கொண்டாடப்பட்டது; 100 பேர்களுக்குமேல் இனிப்பு வழங்கப்பட்டது.

11-வது வட்டம்

22—9—57 காலை 10 மணிக்கு (எண். 4/88-எ, பிராட்வே) தி. மு. கழகப் பணி மனையில் தோழர் தெ. அன்பரசு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் கா. ந. வேலாயுதம், சனநாயகம், மு. மனோகரன், . வி. மாணிக்கம், என். இராமதாஸ், மூர்த்தி, து. தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசினர். இனிப்பு வழங்கப்பட்டது.

12-வது வட்டம்

17—9—57 காலை தி. மு. கழகச் சார்பில் தோழர் வி. தர்மலிங்கம் கொடியேற்றிவைத்தார். இரவு 8 மணிக்கு தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் ஆர்பர் வரதராஜ் தெருவில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கணேசன், தமிழழகன் ஆகியோர் பேசினர்; தின்பண்டம் வழங்கப்பட்டது. பின்னர்தோழர் எ. பொன்னுசாமியின் இன்னிசை நடந்தேறியது.

18-வது வட்டம்

23—9—57 காலை 10 மணியளவில் முத்தமிழ் மன்றச் சார்பில் தோழர் ந. பெ. ஏகாம்பரம் தலைமையில் மன்றத் தோழர்கள் பிரிவினை நாள் பற்றிப் பேசினர். இளைஞர் கலை வளர்ச்சி மன்றத்தாரால் இன்னிசை நடைபெற்றது. சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

26-வது வட்டம்

பெரியமெட்டு தாளமுத்து—நடராசன் நினைவுப் பள்ளி மாணவ, மாணவிகளின் கொடி வணக்கத்துடன் தோழர் நல்லதம்பி 17—9—57 காலை 7 மணிக்குக் கொடியேற்றி வைத்தார்.

மாலை 5 மணிக்கு 300 சிறுவர்களுக்கு பாயசம் வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு தோழர் சு. நல்லதம்பி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வீரன், ச. கன்னியப்பன் ஆகியோர் கருத்து விளக்கம் தந்தனர்.

33-வது வட்டம்

19—9—57 மாலை 6 மணிக்கு சேத்துப்பட்டு தி. மு. கழகப் பணிமனையில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள் கொடியேற்றிவைத்தார். கலைவாணர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டபின் தோழர்கள் க. முருகேசனார், எம். ஏ. பழனி ஆகியோர் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

34-வது வட்டம் :

தி. மு. க. கிளையின் சார்பிலும் டாக்டர் அம்பேத்கார் நினைவு மன்ற ஆதரவிலும் 18—9—57 மாலை 6-30 மணிக்கு, விழாப் பொதுக்கூட்டம் சேத்துப்பட்டு பிள்ளையார் கோவில் தெருவில் சிறப்புற நடைபெற்றது.

தோழர் சி. ஆர். கோலப்பா தலைமை வகித்து கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினர்.

அடுத்து, தோழர் மா. செங்குட்டுவன் பேசுகையில் 'விடுதலை' வார விழா என்பதன் உட்பொருளை விளக்கி, மாற்றுக் கட்சிக்காரர்களின் கூற்றுகளுக்குத் தக்க விதத்தில் பதிலளித்தார்.

பிறகு. தோழர் வ. சங்கரநாராயணன், திராவிடநாடு விடுதலையடையவேண்டிய இன்றியமையாமையை விளக்கியும், தென்னாட்டுக்கு வடநாடு இழைத்துவரும் அநீதிகளை புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டியும் பேசினர்.

அடுத்து, தோழர் தி. சு. கிள்ளிவளவன் பேசுகையில், கழகக் கொள்கைகளை விளக்கிக்கூறி, 'சுதந்தரப் பயணம்' திரைப்படத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதை எடுத்துக்காட்டி, டில்லி ஆதிபத்தியத்தின் ஆதிக்க வெறியைக் கண்டித்தார்.

இறுதியாகத் தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், தொகுதி மக்களுக்குரிய குறைபாடுகளை நிறைவேற்றிவைக்க தான் என்றும் தயாராக இருப்பதாகவும், மக்கள் தன்னை உரியவகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், தான்மட்டுமல்லாது, கழக எம். எல்.ஏ.-க்கள் அனைவருமே மக்கள் நலத்தில் அக்கறைகொண்டு பாடுபடக்கூடியவர்கள் தான் என்றும், கழகத்தோழர்கள் தயவு தாட்சண்யமின்றி, யார் குற்றம் செய்தாலும் எடுத்துக்காட்டி கண்டிக்கக்கூடியவர்கள் என்பதையும் கூறினர்,

பின்னர், நேரு ஆட்சியின் அலங்கோலத்தை வர்ணித்து, இந்த நாட்டுக் காங்கிரசுக்காரர்களின் அடிமைப்புத்தியை எடுத்துக்காட்டி திராவிடநாடு பிரிவினையின் அவசியத்தை விளக்கியதுடன், இந்தித்திணிப்பை வன்மையாகக் கண்டித்தார்.

தோழர் ஆசைத்தம்பி அவர்கட்கு, டாக்டர் அம்பேத்கார் நினைவு மன்றத்தின் சார்பில் அதன் துணைத்தலைவர் தோழர் மு. சு. மணி மலர்மாலை அணிவித்தார்.

கூட்டத்துவக்கத்தில் சேலம் சீனிவாசன் இயக்கப் பண்கள் பாடினர்.

* * *

விழாவையொட்டி, நுங்கம்பாக்கத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் 18—9—57 காலை பல இடங்களில் தி. மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

34-வது வட்ட தி. மு. க. கிளை, இளைஞர் மறுமலர்ச்சி மன்றம், குறள்நெறிக் கழகம், அறிவியல் மன்றம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், வள்ளுவர் படிப்பகம், சமூக ஊழியர் மன்றம், டாக்டர் அம்பேத்கார் மன்றம், ஆகியவற்றின் பணிமனைகளிலும் மற்றும் ஆயிரம் விளக்குத் தொகுதியைச் சேர்ந்த வைகுந்தபுரம், ஜயலட்சுமிபுரம், சேத்துப்பட்டு அப்பாராவ் தோட்டம், அப்பாசாமித் தெரு ஆகியவிடங்களிலும் தோழர் ஆசைத்தம்பி கொடியேற்றிவைத்தார். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

40-வது வட்டம்

22—9—57 மாலை 5 மணிக்கு, சேப்பாக்கம் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் இரா. இளம்பரிதி தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் பொன்னுரங்கம், மலையமான், திருநாவுக்கரசு, மை. ஆ. அருணன், ஆ. தானியேல், கோ. த. மணி, தி. துரைக்கண்ணு ஆகியோர் பேசினர். இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

23—9—57 மாலை 6 மணிக்கு, லாக் நகர் சாமி படிப்பகப் பணிமனையில் தோழர் கோ. தாமோதரன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் மலையமான், அன்பழகன், மோகன் சீதாபதி, புதுமைப்பித்தன், எம். கே. மணி, எம். கே. இராசமாணிக்கம், நெடுமாறன், ம. பா. சாரதி, நடராசன் ஆகியோர் பேசினர்.

* * *

சேப்பாக்கம் அழகிரி நினைவு மன்றச் சார்பில் 22—9—57 பகல் 12 மணியளவில் 200 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. மாலை 4 மணியளவில் மன்றப் பணிமனையில் தோழர் ஆ. வெ. செயராமன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. பொன்னுரங்கம். இரா. இளம்பரிதி, திருநாவுக்கரசு, அருணன், அ. தானியேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

45-வது வட்டம்

23—9—57-ல் தி. மு. கழகப் பணிமனையில் தோழர் கு. துரைவேலு தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் இரா. காசிச்சாமி கொடியேற்றிவைத்தார். தோழர்கள் பலர் பேசினர். தோழர் அ. த. அரசு திராவிட நாடு படத்தைத் திறந்துவைத்துப் பேசினர்.

புது வண்ணை

23—9—57 காலை 8-30 மணிக்கு, அண்ணா படிப்பகச் சார்பில் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. 9 மணிக்கு தோழர் கே. சம்பந்தம் தலைமையில் தோழர்கள் பலர் பேசினர். மாலை 6-30 மணிக்கு தோழர் கே. ஏ. அர்ச்சுனன் குழுவினரால் இன்னிசை நடைபெற்றது.

இராயபுரம்

கவுஸ்மொய்தீன் பேட்டையில் திராவிட நற்பணி மன்றத்தின் சார்பில் தோழர் கே. முத்து தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் அன்புரோஸ், புகழேந்தி ஆகியோர் பேசினர். செயலாளர் நன்றி நவில கூட்டம் சுமார் 8-45 மணிக்கு முடிவுற்றது.

தண்டையார்பேட்டை

குறள் அறிவு மன்றச் சார்பில் 22—9—57 காலை 10 மணிக்கு 100 ஏழைகளுக்குக் கஞ்சியூற்றப்பட்டது; அன்று மாலை மன்றப் பணிமனையில் தோழர் ச. சக்கரபாணி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வெ. கபிலன், தி. ந. மதிவாணன் உள்ளிட்டு தோழர்கள் பலர் பேசினர்.

நுங்கம்பாக்கம்

இளைஞர் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் இராமநாய்க்கன் தெருவில், 19—9—57 மாலை 6-30 மணிக்கு விழாப் பொதுக்கூட்டம் தோழர் என். டி. எழுமலை தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பி. சிவசங்கரன், வ. சங்கரநாராயணன், மா. செங்குட்டுவன், முருகேசன், தி. சு. கிள்ளிவளவன் ஆகியோர் பேசினர். தோழர் சொர்ணம் கலைவாணர் என்.எஸ்.கே. படத்தைத் திறந்துவைத்தார். பின்னர் தோழர் க. அறிவழகன் இன்றைய அரசியல் நிலையை விளக்கி, திராவிட நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தினர். இறுதியாகப் பேசிய தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் திராவிட இயக்கத்தின் தோற்றம் முதல் இன்றுவரையுள்ள வரலாற்றையும், நம் கழகம் அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் ஆற்றிவரும் பணிகளையும் எடுத்துக்கூறி, திராவிட நாடு ஏன் பிரிய வேண்டும் என்பதைத் தெளிவுபட விளக்கினர்.

திருவான்மியூர்

22—9—57 மாலை 6-30 மணிக்கு திருவள்ளுவர் மன்றச் சார்பில் விழாக்கூட்டம் தோழர்கள் விநாயகம், கோவிந்தன் ஆகியோரின் நாட்டுப் பண்ணுடன் துவக்கப்பட்டது. தோழர் சி. ந. சாரங்கபாணி தலைமை வகித்தார். தோழர்கள் சா. சந்திரசேகரன், ப. ந. ராசன், மற்றும் பலர் பேசினர். கடைசியாக சிற்றுண்டி வழங்கப்பட்டது.

'சாகுந்தல'த்திற்குப் பரிசுத் திட்டமாம்!

சங்கராச்சாரியாரின் தாராளம்!

சென்னை, அக். 5—

காளிதாசன் சமஸ்கிருத மொழியில் எழுதிய கற்பனைக் காதல் 'கதையான 'சாகுந்தல'த்தை மறைந்த தமிழ்க்கடல் மறைமலையடிகளார் தமிழாக்கியுள்ளார். அதைப் படித்து நல்ல கட்டுரை எழுதுபவருக்கு ரூ. 100-க்குக் குறையாமல் பரிசு வழங்கும் திட்டத்திற்காக ரூ. 5,000 மூலதனத்தை சங்கராச்சாரியார் வழங்கியுள்ளாராம்.

இந்தப் பரிசு, பல்லாவரத்தில் ஏற்படவிருக்கும் மறைமலையடிகள் தமிழ்க் கல்லூரியில் பயிலும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும்.

அன்பளிப்புகள்

★

திருமணங்கள்

சென்னை—வண்ணைத் தோழர் எஸ். பூபதி—தோழியர் மு. தனம்மாள் திருமணம் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் 15—9—57-ல் நடைபெற்றது; தோழர்கள் இரா. செழியன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 வழங்கப்பட்டது.

* * *

சென்னை — பழைய வண்ணையில், தோழர் கோ. கோதண்டன்—தோழியர் கிருட்டினவேணி திருமணம், தோழர் எஸ். கோவிந்தசாமி தலைமையில், 15—9—57-ல் நடைபெற்றது; தோழர்கள் இரா. செழியன், அன்புரோசு, கே. எம். கண்ணபிரான், த. சேதுராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அளிக்கப்பட்டது.

* * *

சென்னை 5-வது வட்டம் தோழர் சா. கணேசன்—தோழியர் அன்னம்மாள் திருமணம் 15—9—57-ல், கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் இரா. செழியன், அன்புரோசு, காஞ்சி-மணிமொழியார், சேதுராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

சென்னை — புதுவண்ணையில் தோழர் காளியப்பன்—தோழியர் பத்மாவதி திருமணம் 16-9-57-ல் தோழர் வெ. கோதண்டன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் கே. எஸ். மணி, க. நம்புராஜ், ந. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

சிங்கம்புணரி தோழர் சுந்தரம்—தோழியர் மீனும்பாள் திருமணம் 15-9-57ல், நெற்குப்பையில் தோழர் முடியரசன் தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

வாலீஸ்புரம் தோழர் அரங்கசாமி—தோழியர் தனலக்குமி திருமணம் தோழர் து. ப. அழகமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சு. நெடுமாறன், க. மருதமுத்து, க. கலியபெருமாள், ம. சோமசுந்தரம், தி. கிருட்டினசாமி, கே. வி. பெருமாள், பசவலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

ஒரிசா மாநிலத்திலுள்ள தால்சேர் காலரியில், 11-9-57ல், தோழர் எஸ். ஜெயமணி தலைமையில் தோழர் மா. காசிராவ்—தோழியர் சந்திரா திருமணம் நடைபெற்றது. தோழர்கள் நா. செல்வராஜ், மு. க. சாமுவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தில், உயர்தர சுரங்க அதிகாரிகள் (வங்காளிகள்) உட்பட திரளானவர்கள் கலந்துகொண்டதுடன், திருந்திய திருமண முறையைக் கண்டு வியப்பும், மகிழ்ச்சியும் கொண்டனர். இவன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்

இந்தித் திணிப்பு: ஈ.வெ.கி.சம்பத் முழக்கம்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று அண்ணா அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே இதனை என் குறிப்பிடுகிறேனென்றால், டில்லியில், வடநாட்டு எகாதிபத்தியத்தை இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் நிலைநிறுத்துவதற்கான எல்லா முயற்சிகளும் அனேகமாக முடிவடைந்துவிட்டன என்று சொல்லக்கூடிய முறையில் அவர்கள் வந்திருக்கிறார்கள்.

"இந்த இந்திப் பிரச்சினையில் மட்டும் அவர்கள் வெற்றிபெற்று விடுவார்களேயானால், அவர்களுடைய எகாதிபத்தியத்தை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு எவரும் அசைத்துவிடமுடியாது என்ற கருத்திலேதான், அந்தக் கடைசி முயற்சியிலே அவர்கள் மிகவும் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

"நாம் பல கட்டங்களிலே ஏமாந்துவிட்டோம். வெள்ளைக்காரனுடைய போராட்டத்திலே நம்முடைய கவனத்தைத் திருப்பித் திருப்பி, இந்த நாட்டிலே மற்றொரு பெரியதொரு எகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதிலே அவர்கள், பல கட்டங்களிலே ஓரளவு வெற்றிபெற்றிருக்கிறார்கள். அந்த முழு முயற்சியும் பரிபூரணமாக வெற்றிபெறுவதற்கு இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கியிருக்கிறது; அதுதான் இந்திப் பிரச்சினையாகும்.

"அந்தப் பிரச்சினையிலே வெற்றிபெறுவதற்குத்தான் அவர்கள், அப்படியே தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நம்முடைய கண்களிலே மிளகாய்ப் பொடியைத் தூவி கடைசி முயற்சியிலேயும் வெற்றிபெறுவது என்று அவர்கள் சந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்; 'எங்கே இடமிருக்கிறது?'—என்று, தங்களுடைய கழுகுக் கண்களினாலே தேடிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

"பல காங்கிரஸ் நண்பர்கள் கூட ஒன்றுமறியாமல் உள்ளம் பூரிக்கிறார்கள்; 'இந்திப் பிரச்சினையிலே ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கிறது எங்களுடைய சர்க்கார்' என்று, என்னிடத்திலே கூறுகிறார்கள். அவர்கள், ஜனநாயகத்துக்கு மதிப்பு கொடுப்பவர்கள் அல்ல என்பது, மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இது கடைசி முயற்சி—கடைசி கட்டம். கடைசிக் கட்டம் என்பதுமட்டுமல்ல; இந்தக் கடைசி கட்டத்திலே கிடைக்கின்ற வெற்றி தோல்வியைப் பொறுத்துத்தான், எகாதிபத்தியத்துக்கு வாழ்வா—சாவா என்ற பிரச்சினை இருக்கின்றது என்று அவர்கள் அறிகின்ற காரணத்தாலேதான், மற்றப் பிரச்சினைகளிலே காட்டுகின்ற துடுக்குத்தனத்தை விட—மற்றப் பிரச்சினைகளிலே காட்டுகின்ற அவசர - ஆத்திர உணர்ச்சிகளைவிட, இதிலே மிகவும் ஜாக்கிரதையாக நடைபோடுவதற்கு இன்றையத் தினம் பதுங்கிப் பதுங்கிப் பாய்வதற்கு புதர்களைத் தேடித்தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

"ஒன்றை நான் மிகவும் உறுதியாகக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இந்தியை எதிர்க்கும் பிரச்சினையில் ஒரு காலத்தில் தமிழர்கள் தனியாக இருந்தார்கள், இந்தியத் துணைக் கண்டத்தில்; ஒரு காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில்திலே இருந்த அத்தனை மாநிலத்துக்காரர்களும், 'இந்தியாவிலே ஒரு தேசிய இனம் உருவாக வேண்டுமென்றால்— இந்தியாவிலே ஒரு தேசிய ஒற்றுமை நிலைபெற வேண்டுமென்றால், இந்தியை அனைவரும் கற்றுத்தான் தீரவேண்டும்' என்ற தவறான பாதையிலே அத்தனை பேரும் சென்றார்கள்; அந்தக் காலத்திலேயே தமிழர்கள், தனியாக நின்று இந்தியை எதிர்த்துப் போராடினார்கள்.

"இன்றைக்கிருக்கின்ற ஒரு நிலைமை நமக்கெல்லாம் மேலும் உற்சாகத்தைத் தரக்கூடிய புதிய நிலைமையாகும். இன்றையத் தினம் தமிழர்கள் தனியாக இல்லை. இந்தியத் துணைக்கண்டத்திலே யிருக்கிற பல்வேறு மாநிலங்களும், வடநாட்டிலேகூட, வடமேற்கிலேயும் — வடகிழக்கிலேயும் ஓரவட்டாரங்களில் இருக்கின்ற பிராந்தியங்களும் இன்றையத்தினம், 'இந்திப் பிரச்சினையென்பது ஒரு மொழிப் பிரச்சினையல்ல; அது ஒரு அரசியல் ஆதிக்கவெறிப் பிரச்சினை' என்பதைத் தெரிந்து கொண்டு, நம்மிடத்திலே அவர்கள் கைகுலுக்கி, நம்மைப்பற்றி அவர்கள் மிகஅதிகமாகத் தெரிந்து கொள்ளுவதற்கு எதற்காக?—இந்தியை எதிர்ப்பதற்கு! இந்தி எதிர்ப்பினுடைய வரலாற்றைப் புரிந்து கொள்ளுவதற்கு! இன்றையத்தினம் நமக்கு இந்தியத் துணைக்கண்டத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் வீரத்துணைவர்கள் கிடைத்திருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

"'திராவிட நாடு என்பது கற்பனை—திராவிட நாடு என்பது கனவு' என்று கூறியவர்களுக்கெல்லாம், முகத்திலே அறைவதைப்போல் இன்றையத்தினம் வடநாட்டிலே — டெல்லியிலே உருவாகிக்கொண்டிருக்கின்ற பல நிலைமைகள் இருந்துகொண்டிருப்பதை நான் உங்களுக்கு உணர்த்துகிறேன்.

"திராவிட நாடு பிரச்சினை மட்டுமல்ல; இன்றைக்கு டெல்லியிலே பலபேரும்—பல கோஷ்டிகளிலேயும் கூடிக்கூடி என்ன பேசுகிறார்கள் என்றால், காங்கிரசை எதிர்ப்பதற்கு 'அகில இந்திய நீதியிலே ஒரு கட்சி வேண்டுமே, என்ன செய்வது' என்று பேச்சைத் தொடங்குகிறார்கள். அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியிருக்கிறது—'அது தன்னுடைய கடைசி அத்தியாயத்திலே யிருக்கிறது; பிரயோசனமில்லை' என்கிறார்கள்; அகில இந்திய சோஷலிஸ்டுக் கட்சியிருக்கிறது—'அது கருவிலேயே அழிந்துபோன பிண்டமாக இருக்கிறது; என்ன செய்யலாம்' என்கிறார்கள்; அகில இந்திய பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியிருக்கிறது—'அது வேலை தேடித் தரும் நிலையத்தில் இடம் தேடுகின்றவர்களைப்போல், காங்கிரசிலே இடம் பிடிப்பதற்கு காத்துக்கொண்டு 'கியூ'விலே நிற்கின்றவர்களாய் இருக்கிறார்கள்' என்கிறார்கள், ஆகவே, 'அகில இந்தியக் கட்சி' என்று ஒரு கட்சி உருவாக வேண்டுமென்றால், எந்த அடிப்படையிலே உருவாகும்? பொருளாதார அடிப்படையிலே உருவாக முடியுமா என்றால்—முடியாது; ஏன்? இன்றைக்குக் காங்கிரஸ் சொல்லுகிறது — 'தன்னுடைய பொருளாதாரக் கோட்பாடும், குறிக்கோளும் சோஷலிசம்' என்று! இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களும் சொல்லுகிறார்கள்—'சமதர்மம்தான் எங்களுடைய பொருளாதாரக் குறிக்கோள்'—என்று! இந்து மகாசபைக்காரர்கள்கூட கூறுகிறார்கள்—கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள்—சோஷலிஸ்டுகள் கூறுகிறார்கள்—பிரஜா சோஷலிஸ்டுகள் கூறுகிறார்கள்; ஆகவே, பொருளாதாரத் துறையிலே எங்களுக்கென்று தனிக் கருத்து இருக்கிறதென்று சொல்லி புதிய கட்சியைத் துவக்குவதற்கு இந்த நாட்டு ஜனநாயகத்திலே இடமிருக்கிறதா என்றால், இடம் கிடையாது என்பதை அவர்கள் உணருகிறார்கள்.

"அந்த இடத்திலேதான் நாம் சொல்லுகிறோம்— தற்பெருமைக்காகச் சொல்லவில்லை— கர்வத்தினாலே சொல்லவில்லை —திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும் வழி காட்டியாக இருக்கிறது.

"பொருளாதாரத் துறையிலே காங்கிரசை எதிர்த்து ஒரு புதிய கொள்கையை வைப்பதற்கு இந்த நாட்டிலே இடமும் இல்லை— தேவையுமில்லை. ஒரே ஒரு துறை இருக்கிறது; என்ன அந்தத் துறை? நாட்டினுடைய அரசியல் அமைப்பை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள்; எத்தனையோ கேடுகள் இருக்கின்றது. இந்த சர்க்காரினாலே மக்கள் நலன் பாதிக்கப்படுகின்றன; நலன்களைவிட மிக அதிகமாக உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

"இந்த உரிமைகளுக்கு நிலைக்களனாக இருக்கக் கூடிய அரசியல் சட்டத்திலே ஆபாசங்களும், சதிகளும், சூழ்ச்சிகளும் நிறைந்துகிடக்கின்றன; அந்த சூழ்ச்சிகளைச் சாடுவதற்கும், அந்தச் சதிகளைச் சுட்டு எரிப்பதற்கும் என்றைப்பத் தினம் இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலேயிருக்கின்ற மக்களும் திரண்டு எழுகின்றார்களோ, அன்றையத் தினம் இந்திய மக்களின் அரசு என்ற பெயராலே வடநாட்டிலேயிருக்கின்ற சில கொழுத்த இந்தி வெறியர்கள் கைப்பற்றிக் கொண்டிருக்கின்ற அந்த ஆட்சிபீடத்தை சுக்கு நூறாக்க முடியும் என்ற எண்ணத்தை முன்னேற்றக் கழகந்தான் இந்தியாவுக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது.

"அதை அவர்கள் எப்படி அறிகிறார்கள்—உணருகிறார்கள் என்பதைத்தான் நான் இந்த இடத்திலே கூற விரும்புகிறேன். டெல்லியிலே முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உலவிக்கொண்டிருப்பது இரண்டு தோழர்கள் மட்டுமல்ல; மற்றொருவர் இருக்கிறார்—அவர்தான் நம்முடைய அண்ணா அவர்கள். பலர் அதை அறியமாட்டார்கள்; அண்ணாவினுடைய ஆங்கில வார இதழ் 'ஹோம்லண்ட்' இதழ் டெல்லியிலே 'இராஜநடை' போட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே 'ஹோம்லண்ட்' இதழ் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையற்றதாயிருக்கலாம்; ஆனால் 'ஹோம்லண்ட்' இதழை—'அரசியலிலே காங்கிரசை எதிர்ப்பதற்கு என்ன மேடை இருக்கிறது —எந்த இடத்திலே நின்று கொண்டு காங்கிரசை எதிர்ப்பது? பொருளாதாரத்துறையிலே காங்கிரசிற்கு கட்சியமைக்க முடியுமா? அல்லது வேறு துறையிலே கட்சியமைக்க முடியாதே' என்று திண்டாடிக்கொண்டிருப்பவர்களுக்கு —அண்ணாவினுடைய 'ஹோம்லண்ட்' இதழை அண்ணாவின் அருமைத் தம்பிமார்கள் இருவரும் கையில் ஏந்திக்கொண்டு, 'இதோ பாருங்கள், எங்களுடைய முயற்சி; கடந்த எட்டாண்டுக்காலமாக தமிழ்நாட்டிலே நாங்கள் செய்துவந்து வெற்றி கண்ட முயற்சி; இதை நீங்கள் கண்டிப்பாகக் கடைப்பிடித்துப் பாருங்கள்; இதனாலே நீங்களும் தானே பாதிக்கப்பட்டிருக்கின்றீர்கள்' என்று, பாதிக்கப்பட்ட மற்றவர்களிடத்திலே தரும்போது, அவர்கள் அதை அறிகிறார்கள் — உணருகிறார்கள் — பாராட்டுகிறார்கள். அவசர அவசரமாக, 'அண்ணாவைப் பார்க்க வேண்டும்' என்கிறார்கள்; 'அவ்வளவு சீக்கிரம் அண்ணா அவர்கள் கிடைக்கமாட்டார்; இன்னும் 6 மாதம் பொறுங்கள்' என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்."

(பேச்சு முடியவில்லை)

வானவெளியில் செயற்கைச் சந்திரன்

ரஷ்யா பறக்கவிட்டது

மாஸ்கோ, அக். 5— வானவெளியில் ஒரு செயற்கைச் சந்திரனை ரஷ்யா பறக்கவிட்டிருப்பதாக 'டாஸ்' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

560 மைல் உயரத்தில் அக்கிரகம் பூமியைச் சுற்றி வருகிறதாம். அதன் குறுக்களவு 23 அங்குலம் எனறும், எடை 180 ராத்தல் என்றும், அது பூமியை 96 நிமிடங்களில் ஒருமுறை சுற்றிவருகிறது என்றும், 18,000 மைல் வேகத்தில் இதுவரை 22 முறை பூமியைச் சுற்றிவந்துள்ளது என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

வான்மண்டலப் பிரயாணத்திற்கு இந்த முயற்சி ஊக்கம் தருமாம். இதில் பொருத்தப்பட்டுள்ள வானொலிக் கருவிகள் ரேடியோ அலைகளைப் பதிவு செய்கின்றனவாம்.

இக்கிரகத்தைத் தொடர்ந்து, பல நுணுக்கக் கருவிகள் பொருத்தப்பட்டு மேலும்.பல செயற்கைச் சந்திரன்கள் விடப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்த விஞ்ஞான சாதனை மிகவும் பாராட்டத்தக்கது என்றும், இதன் மூலம் விஞ்ஞான வளர்ச்சிக்கு பல உண்மைகள் கிடைக்கக் கூடுமென்றும் குறிப்பிட்டு, அமெரிக்கா பாராட்டியுள்ளது.

ரஷ்யா மொத்தம் 24 செயற்கைச் சந்திரன்களை வானவீதியில் சுற்றவிடுவதற்குத் திட்டம் தீட்டி வருகிறதாம்.

1958 இறுதிக்குள் ஒரு பிரயாணியுடன் செயற்கைச் சந்திரன் விடப்படும் என்று சோவியத் விஞ்ஞானி ஒருவர் கூறியுள்ளார் என்றும் செய்தி வெளியாகியுள்ளது.

இப்போது பறக்கவிடப்பட்டுள்ள செயற்கைச் சந்திரன் 6,50,000 மைல் பிரயாணம் செய்துள்ளது என்றும், பூமி,மற்ற கிரகங்கள் ஆகியவற்றின் படங்களை ரேடியோ மூலம் அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது மிகப் பெரிய விஞ்ஞான முன்னேற்றம் என்று பஞ்சசீலப் புருஷர் பண்டித நேரு பாராட்டியுள்ளார். இந்த முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு உலக அரசியல் மாறவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பை அலட்சியம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தொடர்ந்து அணு சோதனையை நடத்தக்கூடாது' என்று கேட்டுக்கொண்டதற்கு, அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் பதிலளித்துள்ளார்.

முதலில் அணு ஆயுத உற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டுமாம்; அப்போதுதான் அணுச் சோதனைகளை நிறுத்துவதுபற்றி முடிவு செய்யப்படுமாம்.

எனவே, கதிரியக்கம் அதிகமாகப் பாதிக்காதவகையில் அணுச் சோதனைகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடுமாம்.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
12 : காவேரிப்பட்டினம் (நாடகத் தலைமை)
13 : கோவை
14 : ஆனைமலை (வே. புதூர்)
15 : கோபிசெட்டிப்பாளையம்
16 : சென்னிமலை
22 : நீர்வளூர் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா
26 : மயிலை நபிகள் நாயகம் விழா

கழகக் கூட்டங்கள்

★

திருத்துறைப்பூண்டி :
தெற்கு வீதியில்
8—10—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
என். தருமலிங்கம்

★

சீர்காழி :
தேர் வடக்கு வீதி
9—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : இரே. சண்முகம்
பேசுபவர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.

★

பாலக்கோடு :
சந்தைப்பேட்டையில்
9—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. சி. மாணிக்கம்
பேசுபவர் :
கி. மனோகரன்

ஈ. வெ. கி. சம்பத்

அவர்களுக்கு

திருத்துறைப்பூண்டி பஞ்சாயத்து போர்டு

வரவேற்பு

8—10—57-ல் இங்கு வரவிருக்கும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிப்பதென, 5—10—57-ல், பஞ்சாயத்து போர்டு துணைத் தலைவர் என். அண்ணாமலைத் தேவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற போர்டின் அவசரக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை வானொலியில் சத்தியவாணிமுத்து

எம்.எல்.ஏ.

சென்னை வானொலியில் **8-10-57** பகல் **12**-மணிக்கு 'சிறு துளி பெருவெள்ளம்' என்ற தலைப்பில் திருமதி டாக்டர் சத்தியவாணி முத்து எம்.எல்.ஏ. அவர்கள் பேசுவார்கள்.

அண்ணா படத் திறப்பு விழா

8—10—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்ப முதலித் தெருவில், நடராசா கல்விக் கழகச் சார்பில், தோழர் நா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில், சுவாமி அருணகிரிநாத அடிகளார் அவர்கள், அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைப்பார்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., நீலநாராயணன், நா. பாண்டுரங்கன், ஜி. இலக்குமணன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

இந்த தேகம் இருந்தொரு லாபம் உண்டோ!